சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஒன்றியம், தட்டான்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி

சிவசகங்கை, டிச. 15–

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், தட்டான்குளம் ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்பு த்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொது மக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சியினை அமைக்கும் பணியை செய்தி மக்கள் தொடர்பு த்துறையின் அலுவலர்கள், சிறப்பாக மேற்கொண்டனர்.

முல்லை பெரியார் அணையில் இருந்து தண்ணீர் திறக்கக் கோரி ஆர்.பி.உதயகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம்: பெரும் திரளாக விவசாயிகள் பங்கேற்பு

மதுரை, டிச. 15–

தேனி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் எஸ்.டி.கே.ஜக்கையன் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக விவசாயிகள் பங்கேற்றனர்.

மதுரை கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தேனி மாவட்டம் முல்லை பெரியார் அணையில் இருந்து பதினெட்டாம் கால்வாய், பிடிஆர் கால்வாய், தந்தை பெரியார் கால்வாய் மூலம் விவசாய பாசனத்திற்கு உடனடியாக தண்ணீரை திறந்து விட விடியா திமுக அரசை வலியுறுத்தி தேனி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில், உத்தமபாளையத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமை தாங்கினார். கழக அமைப்புச் செயலாளரும் தேனி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.டி.கே. ஜக்கையன் முன்னிலை வகித்தார். மற்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தவசி, கே தமிழரசன் கருப்பையா, மாணிக்கம், எஸ் எஸ் சரவணன், மதுரை வீரன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவகுமார்,கழக அம்மா பேரவை இணைச் செயலாளர் தேனி ஜெயக்குமார், கழக மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் அனுமந்தன், தேனி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி.டி. நாராயணசாமி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர்.டி கணேசன், முத்துரத்தினம், வீரமணி கர்ணன், சற்குணம், இளையநம்பி, ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் ஈஸ்வரன், பாலசுப்ரமணி, முத்துப்பாண்டி, கண்ணன், முருகன், தயாளன், கல்யாணகுமார், கார்த்திகேயன், கணபதி, பிச்சைக்கனி, சேதுராம், மாரியப்பன், மார்க்கண்டன், சக்கரவர்த்தி, சென்ராய்பெருமாள், பாண்டி, நித்தியானந்தம், கருப்பையா, கணேசன், பாஸ்கரன் மற்றும்

மாவட்ட அணி நிர்வாகிகள் போடி குறிஞ்சி மணி, பாண்டியராஜ், கருப்பசாமி பாண்டியன், அப்துல் ஆசிக், முருகவேல், நந்திமாறன், டாக்டர் செல்வம், சுப்பிரமணி, காசிமாயன், சந்தன முத்தையா, திருகுமரன் மற்றும் ஏராளமான விவசாயிகள், பெண்கள் கலந்து கொண்டனர்.

நாகூர் ஆண்டவர் தர்காவின் 467–ம் ஆண்டு கந்தூரி விழா: கொடியேற்றத்துடன் துவங்கியது

நாகப்பட்டினம், டிச. 15–

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் உள்ள உலக புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்காவின் 467 ஆம் ஆண்டு கந்தூரி விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி தர்காவின் 5 மினாராக்களிலும் ஏற்றப்படும் கொடிகள், நாகை மீரா பள்ளிவாசலுக்கு எடுத்து வரப்பட்டு, "துவா' ஓதப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட பெரிய ரதம், சின்ன ரதம், செட்டிப்பல்லக்கு மற்றும் கப்பல் ரதம், சிங்கப்பூரில் இருந்து வரவழைக்கப்பட்ட கொடி உள்ளிட்ட அலங்கார வாகனங்களில் மங்கள வாத்தியங்கள் முழுங்க ஊர்வலமாக நாகை, நாகூரின் முக்கிய வீதிகளில் வலம் வந்தது. ஆண்டவரின் பாடலை தாஹிரா இசையுடன் இசைத்து வந்த இஸ்லாமியர்கள் கொடியினை வரவேற்றனர். அதனை தொடர்ந்து கொடிக்கு தூவா ஓதப்பட்டு வண்ணமிகு வாணவேடிக்கை முழங்க நாகூர் ஆண்டவர் தர்காவிலுள்ள 5 மினாராக்களிலும் கொடியேற்றப்பட்டது. கந்தூரி விழாவின் கொடியேற்றம் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு நாகூர் ஆண்டவரை பிராத்தனை செய்தனர். இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 23ம் தேதி இரவு தாபூத்து என்னும் சந்தனக்கூடு ஊர்வலம் நாகையில் இருந்து புறப்பட்டு 24ம் தேதி அதிகாலை ஆண்டவருக்கு சந்தனம் பூசும் நிகழ்வு தர்காவில் நடக்கிறது.

இவ்விழாவை காண தமிழகம் மட்டுமில்லாமல் பிற மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாகூருக்கு வருகை தந்துள்ளனர். விழாவையொட்டி நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஹர்சிங் தலைமையில் 1000 மேற்பட்ட போலீசார் பாதுகாப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மண்டல தலைவர் முருகன் தலைமையில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுக்குழு கூட்டம்

ராமநாதபுரம்,டிச.15 –

ராமநாதபுரம் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ராமநாதபுரம் மண்டலத்தின் பொதுக்குழு கூட்டம் இராமநாதபுரம் ஹாஜா மகாலில் ராமநாதபுரம் மண்டல தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்க வளர்ச்சி பணிகள் மற்றும் திமுக இளைஞர் அணி மாநாட்டிற்கு அதிகமான உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் பருவ கால பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்வது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இப்பொதுக்குழு கூட்டத்தில் தஞ்சை மண்டல செயலாளர் எழிலரசு, திண்டுக்கல் மண்டல செயலாளர் பாலன், கன்னியாகுமரி மண்டல செயலாளர் வினு மகேஷ், திருநெல்வேலி மண்டல செயலாளர் விஜய், தென்காசி மண்டல செயலாளர் வெங்கடேஷ், மதுரை மண்டலத் தலைவர் கார்த்திகேயன், மதுரை மண்டல செயலாளர் ரவி, விருதுநகர் மண்டல செயலாளர் செல்வராஜ் ,தூத்துக்குடி மண்டல செயலாளர் ஜெபா தங்கராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

மேலும் கூட்டத்தில் இராமநாதபுரம் மண்டல செயலாளர் நாகராஜன், கொள்முதல் பிரிவு துணைச் செயலாளர் சுரேஷ்குமார் , பொருளாளர் தவமணிகண்டன் மற்றும் சங்க உறுப்பினர்கள் நிர்வாகிகள் மற்றும் பருவ கால பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் 'வாரன்டி' இருந்தும் சாம்சங் டிவியின் பழுதை சரி செய்து தர மறுத்த நிறுவனத்துக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவு

திருவாரூர், டிச. 15

திருவாரூரில் 1,20,000 ரூபாய்க்கு புதிதாக வாங்கிய சாம்சங் டிவியில் ஏற்பட்ட பழுதை வாரன்டி மற்றும் கேரன்டி இருக்கும் நிலையிலும் சரி செய்து தர மறுத்த டார்லிங் நிறுவனத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து அதே மாடல் கொண்ட புதிய தொலைக்காட்சிப் பெட்டியை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என திருவாரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதிரடி உத்தரவிட்டார்.

திருவாரூர் மாவட்டம் மேலதிருப்பாலக்குடி பகுதியைச் சேர்ந்த பிரியா. இவர் கடந்த 30.5.2002 அன்று மன்னார்குடி பெரிய கடைத் தெருவில் உள்ள டார்லிங் டி.வி.சி எலக்ட்ரானிக்ஸ் கடையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள சாம்சங் எல்இடி டிவியை பஜாஜ் பைனான்ஸ் நிறுவனத்தில் தவணை முறையில் வாங்கியுள்ளார். 20 மாதம் தவணை காலமாகும். இந்த நிலையில் 17 மாதம் வரை தவணைத் தொகையை முறையாக பிரியா செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில் 17–வது மாதத்தில் தொலைக்காட்சிப் பெட்டியின் டிஸ்ப்ளே பழுதாகி விட்டது.

இது தொடர்பாக டிவி வாங்கிய டார்லிங் நிறுவனத்தை பிரியா நேரில் அணுகிய போது டிஸ்ப்ளே சரி செய்து தர 50 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என கூறியுள்ளனர். புதிதாக வாங்கிய டிவிக்கு வாரண்டி மற்றும் கேரன்டி இருக்கும் நிலையில் இன்னும் தவணைக் காலம் கூட முடியாத நிலையில் எதற்காக மேலும் 50 ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என பிரியா கேட்டுள்ளார். இதற்கு டார்லிங் நிறுவனத்தினர் முறையாக பதில் அளிக்கவில்லை எனவும் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தால் மட்டுமே டிவியை சரி செய்து தரப்படும் என்று கூறியுள்ளனர்.

இது தொடர்பாக பிரியா திருவாரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார். அவரது புகாரை நுகர்வோர் குறைதீர் ஆணையத் தலைவர் சேகர் விசாரித்தார்.

விசாரணையில் பாதிக்கப்பட்ட மனுதாரரான பிரியாவிற்கு ரூ.1.20 லட்சம் மதிப்பிலான அதே மாடல் கொண்ட புதிய சாம்சங் டிவியை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் வாரன்டி மற்றும் கேரன்டி இருக்கும் நிலையிலும் பழுதை சரி செய்து தர மறுத்த டார்லிங் நிறுவனத்துக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து திருவாரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும்வழக்கு செலவு தொகையாக 10 ஆயிரம் ரூபாயையும் கூடுதலாக வழங்க வேண்டும் என்றும் வழக்கு தாக்கலான நாள் முதல் 9 சதவீத வட்டியுடன் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு தொகையை வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

அதிமுக முன்னாள் முப்பெரும் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட துணை செயலாளர் ரவிமனோகரன், பொதுக்குழு உறுப்பினர் ராஜாமுகமது, அரிமா அசோக் பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்

புதுக்கோட்டை நகர கழக செயலாளர் ஆ.செந்தில் தந்தை மிசா. ஆறுமுகம் நினைவு நாளில் அவரது உருவப்படத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.செல்லபாண்டியன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட அவைத் தலைவர் அரு. வீரமணி, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், சக்தி ராமசாமி, கே.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, பா.ரெங்கராஜன் ஆகியோர் உள்ளனர்.

தங்கநகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் பல வாடிக்கையாளர்களால் **01.10.2022** முதல் **30.11.2022** வரை அடமானம் வைக்கப்பட்டு கடன் பெற்று காலம் கடந்த மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் **27.12.2023 புதன்கிழமை காலை 10.00** மணிக்கு கீழ்க்கண்ட முகவரியில் உள்ள எங்களது ஏலமையத்தில் பகிரங்க ஏலம் விடப்பட உள்ளது. மேலும் ஏலவிபரங்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்த விபரங்கள் எங்கள் கீழ்க்காணும் கிளைகளில் உள்ள தகவல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலம் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கு முறைப்படி பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நகைக்கடன்களை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும், குறிப்பிடப்பட்ட ஏலத்தேதியை மாற்றி வேறு தேதியில் ஏலம் விடவும் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு. ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள், Pan Card, Photo ID Proof, TIN number உடன் கலந்து கொள்ளவும்.

முத்தழகு பைனான்ஸ்
எண் 87, சிவஜோதி காம்ப்ளெக்ஸ், முதல் மாடி,
வெங்காய பேட்டை எதிரில், வாணி விலாஸ் இறக்கம்,
தாடிக்கொம்பு ரோடு,
திண்டுக்கல்-624001.

அதிகாரம் பெற்ற அதிகாரி
S.MANIVANNAN
APPROVED AUCTIONEER

திண்டுக்கல்

JL-3729, JL-3739, JL-3747, JL-3754, JL-3781, JL-3783, JL-3784, JL-3785, JL-3786.

ஒட்டன்சத்திரம்

JL-4518, JL-4522, JL-4523.

தங்கநகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் பல வாடிக்கையாளர்களால் **01.11.2022** முதல் **30.11.2022** வரை அடமானம் வைக்கப்பட்டு கடன் பெற்று காலம் கடந்த மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் **27.12.2023 புதன்கிழமை காலை 10.00** மணிக்கு கீழ்க்கண்ட முகவரியில் உள்ள எங்களது ஏலமையத்தில் பகிரங்க ஏலம் விடப்பட உள்ளது. மேலும் ஏலவிபரங்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்த விபரங்கள் எங்கள் கீழ்க்காணும் கிளைகளில் உள்ள தகவல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலம் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கு முறைப்படி பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நகைக்கடன்களை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும், குறிப்பிடப்பட்ட ஏலத்தேதியை மாற்றி வேறு தேதியில் ஏலம் விடவும் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு. ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள், Pan Card, Photo ID Proof, TIN number உடன் கலந்து கொள்ளவும்.

முத்தழகு பைனான்ஸ்
எண் 54C, சத்தி மெயின் ரோடு
MGR சிலை அருகில்,
கோபிசெட்டிபாளையம்- 638452.

அதிகாரம் பெற்ற அதிகாரி
S.P.SOMASUNDARAMPILLAI
APPROVED AUCTIONEER

கோபிசெட்டிபாளையம் BMG

JL 3876, JL-3883, JL-3884, JL-3885, JL-3893, JL-3900, JL-3935.

திருச்செங்கோடு

JL-0 194, JL-0 198.

சத்தியமங்கலம்

JL-0 308, JL-0 315, JL-0 316.

கவுந்தப்பாடி

JL-2271.

ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனம் சார்பில்

சிவகாசி ஆஸ்கர் கல்லூரியில் குழந்தைகள் பாதுகாப்பு ; விழிப்புணர்வு நிகழ்வு

விருதுநகர்,டிச.15–

உலக தன்னார்வலர் தினத்தை முன்னிட்டு ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனம் சார்பில் சிவகாசியில் உள்ள ஆஸ்கர் கல்லூரியில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியானது சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் தலைமையிலும்ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனத்தின் முதன்மை மேலாளர் தேவேந்திரன் மற்றும் ஆஸ்கர் கல்லூரி தாளாளர் நாராயணசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வு குழந்தை திருமண தடை மற்றும் குழந்தை தொழிலாளர் அகற்றுதல் குழந்தைகள் சார்ந்த பாலியல் துன்புறுத்தல்கள் குறித்தும் குழந்தைகள் உரிமை குறித்தும் அமைந்தது. விழிப்புணர்வு பேரணி ஆஸ்கர் கல்லூரி வளாகத்தில் தொடங்கி சாத்தூர் மெயின் ரோடு வழியாக பேருந்து நிலையம் அருகில் உள்ள கவிதா டெக்ஸ்டைல்ஸ் வரை சென்று முக்கிய வீதிகளில் பேரணி ஆனது விழிப்புணர்வு பதாகைகளுடன் கோசங்கள் இட்டுச் சென்றது அனைவரின் கவனத்தையும் திசை திருப்பும் வகையில் அமைந்தது.

இந்நிகழ்வில் துணை மேயர் விஷ்ணுபிரியா கல்லூரி நிர்வாக இயக்குனர் வினோத் முதல்வர் செல்வராஜ் கவுன்சிலர் காசிராஜன் மண்டல மேலாளர் சேவகன், அன்பால் இணைவோம் சதீஷ்குமார் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா மேலாளர்கள் சத்யகலா, முத்துமாரி, சாந்தி, ராமலட்சுமி ஆகியோருடன் கல்லூரி மாணவ மாணவியர் 150 பேர் பங்கேற்றனர்.

பெரியகுளம் மேற்கு ஒன்றிய பகுதிகளில் பூத்து கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

பெரியகுளம் ,டிச.15 –

பெரியகுளம் மேற்கு ஒன்றியம் பகுதிகளில் அண்ணா தி.மு.க பூத்து கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தேனி மாவட்டம் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணா தி.மு.க கழக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க தேனி கிழக்கு மாவட்டம், பெரியகுளம் மேற்கு ஒன்றியம் பகுதிகளில் பாராளுமன்ற தேர்தல் எதிர்நோக்கி பூத்து கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜெயமங்கலம் விஸ்வநாதபுரம் கிளைக் கழகத்தில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் தேனி மாவட்ட தேர்தல் பணி குழு தலைவர் மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் தலைமையிலும் தேனி கிழக்கு மாவட்ட கழக ஆற்றல்மிகு செயலாளர் முருக்கோடை எம்.பி..ராமர் முன்னிலையிலும், பெரியகுளம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வடபுதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வி.அண்ணபிரகாஷ். கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு முன்னிலையிலும் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் சார்பு அணி நிர்வாகிகள் ஜெயமங்கலம் கிராமத்தைச் சார்ந்த கழக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

MOTILAL OSWAL
HOME LOANS

மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
CIN Number :- U65923MH2013PLC248741
பதிவு அலுவலகம்: மோதிலால் ஓஸ்வால் டவர், ரஹிமுதுல்லா சயானி ரோடு,
பரேல் எஸ்டி டெப்போ எதிரில், பிரபாதேவி, மும்பை–400025 Email : hfquery@motilaloaswal.com
எண்.111, பி சிவலிங்கம் காம்ப்ளக்ஸ், 1வது தளம், காமராஜா, 1வது தெரு பெத்தானியாபுரம், பைபாஸ் சாலை, மதுரை 625016, தமிழ்நாடு
தொடர்பு எண்: ராஜசேகரன் காமராஜ் - 7045501738/ஜெனார்த்தனன் எம்பி - 9324961310

இ - ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான 15 நாட்கள் இ-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன் அளித்தவரான மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டில் (முன்பு ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) அடமானமாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காகவும், மேலும் வட்டி மற்றும் பிற செலவினங்களைத் திரும்பப் பெறுவதற்கும், மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டால் (முன்பு ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) / குறிப்பிட்ட கடனாளிகள் மற்றும் உத்தரவாததாரர்களிடமிருந்து வசூலிப்பதற்காக கீழ்குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் அந்த சொத்துக்கள் **''எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே''** என்ற அடிப்படையில் **''எந்தவித மாற்றமும் இல்லாமல்''** விற்பனை செய்யப்பட உள்ளது. முறையே ரிசர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்கள் பெயர்/கடனக் கணக்கு எண்.	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	அசையா சொத்து குறித்த விவரம்	ரிசர்வ் விலை, டேவணித் தொகை & டேவணித் தொகையை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	இ ஏலத் தேதி மற்றும் நேரம்
Lan: LXMAD00217-180065832 கிளை: மதுரை கடன்தாரர்: ஸ்டீபன் ஆல்பர்ட் சூசை அருள் உடன் கடன்தாரர்: சுகந்தி ஸ்டீபன் ஆல்பர்ட்	23.06.2021 ரூ.457160/- (ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து நூற்று அறுபது மட்டும்)	மனை எண் 1, பெரியார் காலனி, எஸ்எப் எண் 108/4 (பழையது), 108/50 (புதியது), N பஞ்சம்பட்டி கிராமம், திண்டுக்கல், மதுரை வடக்கு, மதுரை தமிழ்நாடு 625014	ரிசர்வ் விலை:ரூ.350000/- (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) EMD: ரூ.35000/- (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) EMD டெபாசிட்டிற்கான கடைசி தேதி :03.01.2024	நாள்: 04.01.2024 காலை 11:00 முதல் மாலை 5:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புகளுடன்)

இ - ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. ஏல ஆவணத்தின் மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி ஏலம் நடைபெறும். ஏலதாரர்கள் எங்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் இ-ஏல சேவை வழங்குநர் M/S. குளோப்டெக் இன்ஃபோசிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம், https://BestAuctionDeal.com மூலம் ஏல ஆவணங்கள், இ-ஏலத்திற்காக வைக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்தின் விவரங்கள் மற்றும் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட உள்ள ஏலப் படிவம் ஆகியவற்றைப் பார்க்கலாம். விருப்பமுள்ள வாங்குவோர் அதே தளத்தில் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் செயல்முறை ஆகியவற்றின்படி **ராஜசேகரன் காமராஜ்** - 7045501738/ **ஜெனார்த்தனன் எம்பி** - 9324961310 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலே குறிப்பிட்டுள்ள இணைய போர்ட்டலில் விவரங்கள் கிடைக்கும் மற்றும் அவர்களின் மையப்படுத்தப்பட்ட உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம்: +91 98100 89933, +91 124 44 70 855, மின்னஞ்சல் ஐடி: Care@BestAuctionDeal.com.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
(மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்)

இடம் : மதுரை
தேதி : 15.12.2023
★மொழிபெயர்ப்பில் முரண்பட்டால், ஆங்கிலப் பதிப்பே மேலோங்கும்.

kotak Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை : 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படும்) 28.06.2021 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி கேஎம்பிஎல் என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. சுல்தான் மைதீன் எஸ், திருமதி. நூர்ஜஹான் எஸ் மற்றும் M/s. பி.எம்.எஸ். ஸ்டோர்** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.604107510210985–ன்கீழ் 08.12.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.12,23,562/–(ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து ஐநூற்று அறுபத்திரெண்டு மட்டும்)** மற்றும் 09.12.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் **03.01.2024 அன்று** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.4,80,000/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.48,000/– (ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 02.01.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார் பதிவு மாவட்டம், வேடசந்தூர் தாலுக்கா, கூம்பூர் பழைய நத்தம் ச.எண். 782/2, புதிய நத்தம் ச.எண்.1034/19, விஸ்தீரணம் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 42.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரண்டு பக்கமும் 54 அடி, மொத்த விஸ்தீரணம் 2295 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி தளம் போடப்பட்ட கட்டிடம் 763.25 சதுர அடி. எல்லைகள் : வடக்கு : அப்துல் ஹை மற்றும் அப்துல் ரஷீத் ஆகியோருக்கு சொந்தமான வீடு, கிழக்கு : காலி மனை மற்றும் சுற்றுச் சுவர், தெற்கு : அட்டவணை ஏ அயிட்டம் 2 சொத்து, பரிதா பேகத்திற்கு சொந்தமானது, மேற்கு : காலி மனை. மொத்த விஸ்தீரணம் 2295 சதுர அடி நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் மற்றும் அனைத்து மாமூல் வசதிகள் உட்பட.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ஸ்ரீசரண் (+91 9738931789), திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 15.12.2023 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**